செ.வெ.எண்: 229 நாள்: 19.03.2020

**ஓய்வூதியர்கள் கருவூலம் மற்றும் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகத்தில் நடைபெறும் வருடாந்திர நேர்காணலில் கலந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.**

**மாவட்ட கருவூல அலுவலர் திரு.மூக்கையா அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஓய்வூதியர்கள் கருவூலம் மற்றும் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகத்தில் நடைபெறும் வருடாந்திர நேர்காணலில் கலந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது. இதுகுறித்து மாவட்ட கருவூல அலுவலர் திரு.மூக்கையா அவர்கள் தெரிவித்ததாவது.

மாவட்ட கருவூலங்கள் மற்றும் சார் கருவூலங்கள் மூலம் ஓய்வூதியம் பெறும் தமிழக அரசு ஓய்வூதியர்கள், குடும்ப ஓய்வூதியர்கள் ஆண்டுதோறும் ஏப்ரல் முதல் ஜீன் மாதம் வரை கருவூலத்தில் நேரடியாக ஆஜராகி நேர்காணலை பதிவு செய்ய வேண்டும். நேரில் வர இயலாதவர்கள் வாழ்வுச்சான்று பெற்று கருவூலத்திற்கு அனுப்ப வேண்டும்.

எனவே இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் ஜீன் மாதம் 30-ம் தேதி வரை தமிழக அரசு ஓய்வூதியர்கள், குடும்ப ஓய்வூதியர்கள் தாங்கள் ஓய்வூதியம் பெறும் மாவட்ட கருவூலங்கள் மற்றும் சார் கருவூலங்களில் ஆஜராகி பதிவு செய்ய கருவூலத்தின் வேலை நாட்களில் நேரில் வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஓய்வூதியர்கள் நேர்காணலுக்கு நேரில் வரும்போது ஓய்வூதிய புத்தகம் கொண்டு வரவேண்டும். இதுவரை வருமான வரி கணக்கு எண், குடும்ப அடையாள அட்டை மற்றும் நடைமுறையில் உள்ள வங்கி சேமிப்பு கணக்கு எண் சமர்ப்பிக்காத ஓய்வூதியர்கள், மேற்படி ஆவணங்களின் நகல்களுடன் தங்களின் ஓய்வூதிய கொடுவை ஆணை எண்ணை குறிப்பிட்டு கருவூலத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதனுடன் ஓய்வூதியர்கள் ஆதார் எண் பெற்றிருப்பின், மின்னனு வாழ்நாள் சான்று”ஜீவன் பிரமாண்” இணையம் மூலம் பெறுவதற்கு உரிய விபரங்களை வழங்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நேரில் வர இயலாத ஓய்வூதியர்கள் ஓய்வூதிய புத்தகம், ஆதார் அட்டை, வருமான வரி கணக்கு எண், குடும்ப அடையாள அட்டை மற்றும் நடைமுறையில் உள்ள வங்கி சேமிப்பு கணக்கு எண் சமர்ப்பிக்கவில்லை எனில் அதன் நகல்களுடன் வாழ்வு சான்றினை உரிய படிவத்தில் ஓய்வூதியம் வழங்கும் கருவூலத்திற்கு அனுப்பப்பட வேண்டும். வாழ்வு சான்று படிவத்தை www.tn.gov.in/karuvoolam என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

அத்தகைய வாழ்வு சான்று படிவத்தினை ஓய்வூதிய வங்கிக் கணக்கு உள்ள கிளை மேலாளர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற மாநில மற்றும் மத்திய அரசு அலுவலர் அல்லது வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியர் அல்லது வருவாய் ஆய்வாளர் அவர்களிடம் சான்றொப்பம் பெற்று அனுப்ப வேண்டும். அனைத்து நகல்களிலும் ஓய்வூதியர்கள் தங்களின் ஓய்வூதிய கொடுவை ஆணை எண்ணை குறிப்பிட்டு ஓய்வூதியம் பெறும் கருவூலத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வெளிநாட்டில் வசிக்கும் ஓய்வூதியர்கள் வெளிநாட்டிலுள்ள இந்திய தூதரக அலுவலரிடம் வாழ்வுச்சான்று பெற்று, சம்பந்தப்பட்ட ஓய்வூதியம் வழங்கும் அலுவலகத்துக்கு அனுப்ப வேண்டும். மேலும் ஓய்வூதியப் புத்தகம், நடைமுறையில் உள்ள வங்கி சேமிப்பு கணக்கு எண், ஆதார் அட்டை, வருமான வரி கணக்கு எண், குடும்ப அடையாள அட்டை போன்ற ஆவணங்களின் நகல்களுடன் வாழ்வு சான்றை உரிய படிவத்தில் ஓய்வூதியம் வழங்கும் கருவூலத்திற்கு அனுப்பப்பட வேண்டும். வாழ்வு சான்று படிவத்தை www.tn.gov.in/karuvoolam என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஓய்வூதியர்கள் தங்களது ஆதார் எண்ணை கருவூலத்தில் பதிவு செய்து, இணையதள வழி சேவையை பயன்படுத்திக் கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தற்போது www.jeevanpramaan.gov.in என்ற இணையதள வழியாக ஓய்வூதியரின் ஆதார் எண் பதிவு செய்யப்பட்டு, ஓய்வூதியர் தங்களது வாழ்வுச்சான்றினை இணையதளம் மூலமாகவே பதிவு செய்து கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. வெளிநாட்டில் வாழும் ஓய்வூதியர்களும், குடும்ப ஓய்வூதியர்களும் ஆதார் எண் பெற்று கருவூலத்திலும் Jeevan Praman Portal-லும் பதிவு செய்திருந்தால் வாழ்வு சான்றை இணையதளம் மூலமே பெற்றுக் கொள்ளலாம்.

குடும்ப ஓய்வூதியர்கள் நேரில் வருபவர்கள் அல்லது நேரில் வரஇயலாத ஓய்வூதியர்கள் மறுமணம் புரியவில்லை என்பதற்கான உறுதிமொழியினை சமர்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஓய்வூதியர்கள் தற்போதைய இருப்பிட முகவரி, கைபேசி எண், மின்னஞ்சல் முகவரி ஆகிய விபரங்களையும் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஓய்வூதியர்கள் ஏப்ரல் மாதம் 2020 முதல் ஜீன் மாதம் 2020 வரை நேர்காணலுக்கு வரத்தவறினாலோ அல்லது சான்றொப்பம் பெறப்பட்ட வாழ்வுச் சான்றினை அனுப்பத் தவறினாலோ ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியம் ஆகஸ்டு மாதம் 2020 முதல் நிறுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. வாழ்வு சான்றினை www.tn.gov.in/karuvoolam என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் இதுவரை ஓய்வூதியர் புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் விண்ணப்பம் அளிக்காதவர்கள் கருவூலத்தில் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து பதிவு செய்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

2018-ம் ஆண்டு வரை பொதுத்துறை வங்கிகளின் மூலம் ஓய்வூதியம் பெற்று பின்னர் தற்போது ஓய்வூதிய முன்னோடி திட்டத்திற்கு மாற்றம் செய்யப்பட்ட அனைத்து ஓய்வூதியர், குடும்ப ஓய்வூதியர்கள் கடந்த ஆண்டை போலவே இந்த ஆண்டும் ஏப்ரல் 1-ம் தேதி முதல் தொடர்புடைய கருவூலம் மற்றும் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகத்திற்கு சென்று வருடாந்திர நேர்காணல் மேற்கொள்ளுமாறும் அவ்வாறு செல்ல இயலாதவர்கள் உயிர் வாழ் சான்றினை உரிய படிவத்தில் உரிய அலுவலரிடம் சான்றொப்பம் பெற்று அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தமிழ்நாடு மின்வாரியம், ரயில்வே, அஞ்சல்துறை, தொழிலாளர் வைப்பு நிதித்திட்டம், மத்திய அரசு ஓய்வூதியர்கள், உள்ளாட்சி மன்ற ஓய்வூதியர்களுக்கு இந்த அறிவிப்பு பொருந்தாது என தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு மாவட்ட கருவூல அலுவலர் திரு.மூக்கையா அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**